


17.12. 2024

தலைப்புச் செய்திகள்

- மத்தியிலும் மாநிலத்திலும் ஒரே அரசு அமைவதால் நல்லாட்சி உறுதி செய்யப்படுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.

- ஒரே நாடு ஒரே தேர்தல் முறை மசோதாவை நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப எதிர்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

- தேசிய தேர்வு முகமை புதிய பதவிகளுடன் சீரமைக்க மத்திய அரசு திட்டமிட்டு வருவதாக மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

- தமிழ்நாட்டில் மழை வெள்ள பயிர் சேத கணக்கீட்டு பணிகளை இன்று முடிக்க மாநில அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

- உலக செஸ் சேம்பியன் குகேஷிற்கு தமிழக அரசின் பாராட்டு விழா இன்று நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள்

*************

பிரதமர் - ராஜஸ்தான்

பிரதமர் திரு.நரேந்திரமோடி ராஜஸ்தானில் 46 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான 24 வளர்ச்சி திட்டங்களை இன்று தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மத்தியிலும் மாநிலத்திலும் ஒரே அரசு ஆட்சி புரிவதன் மூலம் நல்லாட்சி உறுதி செய்யப்படுவதாக குறிப்பிட்டார்.

பெருந்திரளான பொதுமக்களின் ஆதரவு பாரதிய ஜனதாகட்சிக்கு உள்ளதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத அளவாக மத்தியில் தொடர்ந்து 3ஆவது முறையாக பிஜேபி ஆட்சி அமைக்க மக்கள் வாய்ப்பளித்தது குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

மகராஷ்டிரா மாநிலத்தில் பிஜேபி தொடர்ந்து 2ஆவது முறையாகவும்,

ஹரியானாவில் தொடர்ந்து 3 ஆவது முறையாகவும், ஆட்சி அமைத்ததை சுட்டிக்காட்டிய அவர் இதன்மூலம் மக்களின் ஆதரவு புலப்படுவதாக குறிப்பிட்டார்.

பாரதிய ஜனதா கட்சியின் கடின உழைப்பை இந்த வெற்றி புலப்படுத்துவதாக எடுத்துரைத்தார்.

பிஜேபியின் வாக்குறுதிகளை நிறைவேற்ற முனைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பிரதமர் கூறினார்.

*************

ஒரே நாடு ஒரே தேர்தல்

ஒரே நாடு ஒரே தேர்தல் முறை மசோதாவை மக்களவையில் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் இன்று தொடங்கின.

இதற்கான தீர்மானத்தை சட்ட அமைச்சர் திரு.அர்ஜுன் ராம் மெஹ்வால் மக்களவையில் முன்மொழிந்தார்.

ஆரம்ப நிலையிலேயே காங்கிரஸ் திமுக, திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாதி, சிவசேனா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தன.

அரசியல் சாசன அமைப்பின் அடிப்படை கட்டமைப்பின் மீது நடத்தப்படும் தாக்குதல் இது என்றும் எதிர்கட்சிகள் குற்றம் சாட்டின.

நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் ஆய்விற்கு இம்மசோதாக்கள் அனுப்பப்பட வேண்டும் என்று எதிர்கட்சிகள் கோரிக்கை விடுத்தன.

இதனையடுத்து இம்மசோதாவை கூட்டுக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்புவதற்கான வாக்கெடுப்பு தற்போது நடைபெற்று வருகிறது.

ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது நம் நாட்டிற்கு இன்றியமையாதது என்று நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இம்மசோதா தேசத்தின் நலனுக்கானது என்றும் சுட்டிக்காட்டினார்.

தேச மக்களுக்கு சேவையாற்றவே தேர்தல்கள் நடத்தப்படுவதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

இந்த மசோதாவை எதிர்கட்சிகள் எதிர்ப்பது குறித்து கூறிய அமைச்சர் சுதந்திரத்திற்கு பின்னர் 20 ஆண்டுகள் ஒரே தேர்தல் முறை நடைமுறைபடுத்தப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

அரசியல் சாசனத்தின் 356ஆவது பிரிவை காங்கிரஸ் தவறாக பயன்படுத்தியதன் காரணமாகவே நாடாளுமன்ற மற்றும் சட்டப்பேரவை தேர்தல்கள் தனித்தனியாக நடைபெறுவதாக குறிப்பிட்டார்.

**************

தர்மேந்திர பிரதான்

2025 ஆம் ஆண்டு நடைபெற உள்ள உயர் கல்வி சேர்க்கை நுழைவு தேர்வுகளின் செயலாக்கத்தில் தேசிய தேர்வு முகமை தனி கவனம் செலுத்தும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் 10 புதிய பதவிகள் உருவாக்கப்பட்டு தேசிய தேர்வு முகமையை மறு சீரமைக்க மத்திய அரசு திட்டமிட்டு வருவதாக குறிப்பிட்டார்.

நீட் இளநிலை மருத்துவ தேர்வை இணையதளம் அல்லது எழுத்துவடிவில் நடத்துவது குறித்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

எதிர்காலங்களில் கணினி மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான தேர்வுகளை நடத்துவதை அரசு நோக்கமாக கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

கடந்த 8 ஆண்டுகளில் கல்விதுறையை மேம்படுத்துவதற்கான மத்திய அரசின் முயற்சிகளை எடுத்துரைத்தார்.

கல்விக்காக அரசு ஒவ்வொரு குழந்தைக்கும் செலவிடும் தொகை 130 சதவிகிதம் அதிகரித்திருப்பதாக குறிப்பிட்டார்.

2013-14 ஆம் ஆண்டுகளில் 10 ஆயிரத்து 780 ரூபாயாக இருந்த இந்த தொகை 2021-22 ஆம் ஆண்டுகளில் 25 ஆயிரத்து 43 ரூபாயாக அதிகரித்துள்ளதாக கூறினார்.

பிரதமரின் போஷன் அபியான் ஊட்டசத்து மேம்பாட்டு திட்டத்திற்கு அரசு ஒரு லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஒரே தேசம் ஒரே சந்தா திட்டத்தின் கீழ் 13 ஆயிரம் மின்னணு புத்தகங்களை மாணாக்கர் பயில முடிவதாக கூறிய அமைச்சர் அடுத்த 3 ஆண்டுகளில் இதற்கென அரசு ஆறாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யும் என்றார்.

*************

சிவ்ராஜ்சிங் சவ்ஹான்

விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க 6 அம்ச நிலைப்பாட்டை அரசு வகுத்திருப்பதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்தார்.

மக்களவையில் இன்று கேள்விகளுக்கு பதில் அளித்த அவர் உற்பத்தி பெருக்கம், செலவினம் குறைத்தல், குறைந்தபட்ச ஆதரவு விலையை உறுதி செய்தல், பேரிடர் மேலாண்மைக்கான இழப்பீடு, வேளாண் பரவலாக்கல், இயற்கை வேளாண்மையை ஊக்குவிப்பது ஆகியவையே இவை என்று குறிப்பிட்டார்.

வேளாண்மைக்காக அரசு மேற்கொண்டு வரும் சிறப்பு முயற்சிகளால் விவசாயிகளின் வருவாய் தற்போது மாதம் ஒன்றுக்கு 10 ஆயிரத்து 218 ரூபாயாக அதிகரித்திருப்பதாக எடுத்துரைத்தார்.

2002 – 2003 காலத்தில் இவ்வருவாய் 2 ஆயிரத்து 115 ரூபாயாக இருந்ததாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

விவசாயிகளுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் வேளாண் கடன் வழங்கப்படுவதாகவும், மானிய விலையில் உரங்கள் அளிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

குறைந்த பட்ச ஆதரவு விலையின் மூலம் மத்திய அரசு சாதனை அளவாக கொள்முதல் செய்துள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

*************

ஜே.பி.நட்டா

பிரதமர் திரு.நரேந்திரமோடி மாநிலங்களவையில் 75ஆவது ஆண்டு அரசியல் சாசன அமைப்பு மீதான சிறப்பு விவாதத்திற்கு இன்று பதில் அளிக்கிறார்.

முன்னதாக இன்றுகாலை இந்த விவாதத்தின் மீது பேசிய மத்திய அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா ஜனநாயகத்தின் தாயாக இந்தியா திகழ்கிறது என்று கூறினார்.

ஜனநாயகம் என்பது சுதந்திரம், சமத்துவம், உள்ளடக்கம் என்று கூறிய அவர் இந்தியா தனது குடிமக்களுக்கு மதிப்புடன் கூடிய வாழ்வை உறுதி செய்திருப்பதாக எடுத்துரைத்தார்.

இந்நோக்குடன் தொடர்ந்து செயலாற்ற அரசு உறுதிபூண்டிருப்பதாக கூறிய அவர் இந்திய அரசியல் அமைப்பு சாசனத்தை வடிவமைத்த உறுப்பினர்களுக்கு நாடு கடமைபட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

*************

அஷ்விணி வைஷ்ணவ்

நாட்டிலேயே 3 ஆவது பெரிய Smart Phone ஏற்றுமதி நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய மின்னணுத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ஊடகத்தில் வெளியான செய்தியை மேற்கோள் காட்டி தமது சமூகவலைதள பதிவில் இதை பகிர்ந்துள்ள அமைச்சர் சென்ற மாதம் மட்டும் Smart phone ஏற்றுமதி 20 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டியிருப்பதாக எடுத்துரைத்தார்.

இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் வெற்றி இது என்று பெருமிதம் தெரிவித்தார்.

*************

மன்சூக் மாண்டவியா

ஆரோக்கியமான உடல் நலமே வளமான தேசத்தை உருவாக்கும் என்று மத்திய விளையாட்டு இளையோர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ∴பிட் இண்டியா சைக்கிளிங் நிகழ்வை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், இதன்மூலம் சுகாதாரம் மற்றும் பசுமையான

இந்தியாவை விழிப்புணர்வுடன் மேம்படுத்தி காற்று மாசையும் குறைக்க முடியும் என்றார்.

குடிமக்கள் அனைவரும் குறைந்தது ஒரு மணி நேரமாவது சைக்கிளிங் பயிற்சி உள்ளிட்ட உடற்பயிற்சிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள அமைச்சர் அறிவுறுத்தினார்.

நாடுமுழுவதும் ஆயிரம் இடங்களில் ஃபிட் இண்டியா சைக்கிளிங் நிகழ்வு இன்று நடைபெற்றன.

*************

பன்னீர்செல்வம்

தமிழ்நாட்டில் மழை வெள்ள பயிர் சேத பரப்பு கணக்கீட்டு பணிகளை இன்று முடிக்க மாநில வேளாண் உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

மாநில பேரிடர் நிவாரண தொகுதியை விவசாயிகளுக்கு விரைவாக பெற்றுத்தரும் வகையில் உரிய கருத்துருவை அரசுக்கு அனுப்ப வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

*************

உதயநிதி ஸ்டாலின்

சென்னை ஓமாந்தூரார் பன்னோக்கு சிறப்பு மருத்துவமனை அருகே ஐந்தரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட கோ ஆப்டெக்ஸ் புதிய விற்பனை நிலையத்தை துணை முதலமைச்சர் திரு.உதயநிதிஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

பொங்கல் சிறப்பு தள்ளுபடி விற்பனையையும் அவர் தொடங்கிவைத்தார்.

*************

குகேஷ்

உலக செஸ் சேம்பியன் பட்டம் வென்ற குகேஷிற்கு சென்னையில் இன்று பாராட்டு விழா நடைபெறுகிறது.

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் இவ்விழா நடைபெறுகிறது.

*************

வானிலை

வங்க கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி தொடர்ந்து அதேபகுதியில் நிலவுவதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு.செந்தாமரைக்கண்ணன் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**************

தூத்துக்குடி

வானிலை ஆய்வு மைய முன்னெச்சரிக்கையால் தூத்துக்குடியில் விசைபடகு மீனவர்கள் இன்று கடலுக்குள் மீன்பிடிக்க செல்லவில்லை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

திருச்சி

திருச்சி மாவட்டத்தில் அண்மை மழை வெள்ள கணக்கீட்டு பணிகள் நடைபெற்று வருவதாகவும் விரைவில் முழு சேத விவரங்கள் தெரியவரும் என்றும் ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

**************

இந்து சமய அறநிலையத்துறை

திண்டுக்கல் மாவட்டம் பழனியிலிருந்து அறுபடை வீடுகளுக்கு மூத்த குடிமக்களுக்கான ஆன்மீக சுற்றுலா பயணம் இன்று தொடங்கியது.

தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை சார்பிலான இந்த பயணத்தில் திண்டுக்கல், கோவை, ஈரோடு, திருப்பூர் மண்டலங்களிலிருந்து 210 பேர் பங்கேற்றுள்ளனர்.

**************

இருவரி

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் வட்டத்தில் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டம் நாளை நடைபெறுவதால் பொதுமக்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் டாக்டர் உமா கேட்டுக்கொண்டுள்ளார்.

தூத்துக்குடி மாவட்ட தொழில்நுட்ப பணியாளர்களின் திறனை மேம்படுத்துவதற்கான சிறப்பு திறன் பயிற்சி பெங்களூருவில் நடைபெறும் நிலையில் இதற்கான பயணத்தை ஆட்சித்தலைவர் திரு.இளம்பகவத் இன்று தொடங்கிவைத்தார்.

விழுப்புரம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் வரும் வெள்ளிக்கிழமை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது.

சேலம் விருதாச்சலம் ரயில்வே சாலையில் தற்காலிக பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை தற்காலிகமாக அப்பகுதியில் ரயில்வே கேட் மூடப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

கோவை மற்றும் நாகை மாவட்டங்களில் நேரு யுவகேந்திரா சார்பிலான இளையோர் திருவிழா நிகழ்ச்சியில் ஏராளமான கல்லூரி மாணாக்கர் கலந்துகொண்டனர்.

வெற்றிபெற்றவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டன.

திருப்பத்தூர் மாவட்ட உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில், விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திரு.தர்ப்பகராஜ் இன்று கொடியசைத்து துவக்கிவைத்தார்.

சிவகங்கை மாவட்டத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்களுக்கான திருக்குறள் வினாடிவினா போட்டிகள் வரும் 21ம் தேதி நடைபெற உள்ளதால், வரும் 20ம் தேதி மாலைக்குள் இணையதளம் மூலம் இதற்கு விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் கேட்டுக்கொண்டுள்ளார்.

*************

நீலகிரி – வாய்ஸ்:

நீலகிரி மாவட்டம் பந்தலூர் சுற்றுவட்டார பகுதிகளில் இரவு நேரங்களில் குடியிருப்புகளை சேதம் செய்துவரும் ஆண்யானையை வனப்பகுதிக்குள் விரட்டும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்.

- - - வாய்ஸ் - -

_ *************

கிரிக்கெட்

பிரிஸ்பேனில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான பார்டர் - கவாஸ்கர் கோப்பை, 3 வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 4ம் நாள் ஆட்டநேர இறுதியில், இன்று, இந்தியா தனது முதல் இன்னிங்சில் 9 விக்கெட் இழப்பிற்கு 252 ரன் எடுத்து ஃபாலோ ஆனை தவிர்த்துள்ளது.

இந்தியா தற்போது 193 ரன் பின்தங்கி உள்ளது.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 445

*************

மகளிர் கிரிக்கெட்

இந்திய வெஸ்ட் இண்டிஸ் மகளிர் அணிகளுக்கிடையிலான 2ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி நவி மும்பையில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

*************